
# மாந்தர் வாழ்வும் இறையுணர்வும்



முதுமுனைவர்
இரா. இளங்குமரனார்

# மாந்தர் வாழ்வும் இறையுணர்வும்

முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

**இளந்தமிழ்ப் பதிப்பகம்**

*2, பிச்சையம்மாள் நகர்,*

*காசாமலை, திருச்சிராப்பள்ளி - 23.*

*0431 - 2457961*

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | மாந்தர் வாழ்வும் இறையுணர்வும் |
| ஆசிரியர் | | இரா. இளங்குமரனார். |
| முதற்பதிப்பு | : | தி. பி. 2048 கி. பி. 2017 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாள் | | 13. 7 வெள்ளைத் தாள். |
| அளவு | | 1/8 |
| பக்கம் | | vi + 22 = 28 |
| படிகள் | | 1000 |
| விலை | | உருவா. 15/- |
| நூலாக்கம் | | "தி பிரிண்டிங்கு அவுசு"<br>திருச்சிராப்பள்ளி - 23<br>0431 - 202421 |
| வெளியீடு | | இளந்தமிழ்ப் பதிப்பகம்<br>2, பிச்சையம்மாள் நகர்,<br>காசாமலை, திருச்சிராப்பள்ளி - 23.<br>0431 - 2457961 |
| நூல் கிடைக்கும் இடம் | : | திருவள்ளுவர் நிலையம்<br>7, இராமன் தெரு, திருநகர்,<br>மதுரை - 625 006.<br>94427 60616 |

❖ ❖ ❖ ❖

இந்நூலால் கிடைக்கும் வருவாய் பேராசிரியர்

முனைவர் இரா. இளவரசு நினைவு அறக்கட்டளையில் சேர்க்கப்படும்.

# மக்களாம் வெள்ளம்

உலகளாவிய உணர்வு இறையுணர்வு.

உண்டென்பாரும் இல்லென்பாரும்,

இதுவே மெய் எனவும், இது பொய்யெனவும் எதிரிடையாரும் ஆகிய எல்லாம் பழநாள் முதல் இன்று வரை வாழ்தல் தொடர்கதையே!

சமயம் படைத்தோர் சால்பு,

சமய வாணர்க்கே இல்லா தொழிந்தால்

மக்கள் நிலையென்னாம்?

அவரவர் மொழியே இறைமொழியாம் வழிபாட்டுமொழி. தீயபெருங் கேடாகத் தாய்மொழி வழியாக வழிபடும் உரிமையைத் தமிழர் இழந்து நெட்ட நெடுங்காலம்

ஆட்டுமந்தையாய், செக்குமாடாய் ஆகிவிட்ட

பொய்ம்மைப் புனைவுக் கூட்டம் ஒருபால்!

நம்பாமையாய்க் கோயிலை எட்டிப் பாராக்

கூட்டம் ஒருபால்!

கோயிலை ஆட்டிப் படைப்பார்க்குக்

கண்மூடித்தனமும் வாய்ப்பு!

கண்டு கொள்ளாது ஒதுங்கியதும் வாய்ப்பு!

இரட்டை வாய்ப்பைப் பெற்றோர்

தந்நலத்தை - பொய்மைப் புரட்டை

மக்களாம் வெள்ளம் திரண்டால் அன்றி - தெளிவு

கொண்டு திருத்தினால் அன்றி - நரிதன் நரித்தனத்தை விட்டாலும்,

அறிவறிந்து ஏய்க்கும் நரிவிடாது!

"வெள்ளம் தடுப்பதற்கு ஆளுண்டு மக்களாம்

வெள்ளம் தடுப்பார் எவர்?

என்றாக ஒரு சிறுபொறி இச்சுவடி!

இச்சுவடியைக் கவினுறக் கணினிப்படுத்திய பேரன்பு முனைவர் திருமகளார்க்கும் அச்சாக்கப் பொறுப்பேற்ற பேரன்பர் முனைவர் பி. தமிழகனார்க்கும், அச்சாக்கினார்க்கும் நன்றி பெரிதுடையேன்!

**வாழிய நலனே! வாழிய நிலனே!**

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்.**

# எத்துணையும்

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவரவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ!

# மண்ணுலகத்திலே

மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்
இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணுமவ் வருத்தம் தவிர்க்கும்நல் வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை எந்தாய்!

- வள்ளலார்

# அல்லா என்பார் சிலபேர்கள்

அல்லா என்பார் சிலபேர்கள்
அரன்அரி என்பார் சிலபேர்கள்
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்
சொல்லால் விளங்கா நிர்வாணம்
என்றும் சொல்வார் சிலபேர்கள்
எல்லாம் இப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே!

# அந்தப் பொருளை நாம் நினைந்து

அந்தப் பொருளை நாம் நினைந்து
அனைவரும் ஒன்றாய்க் குலவிடுவோம்
எந்தப் படியாய் எவரெதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போமதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்!

**நாமக்கல் கவிஞர்.**

# மாந்தர் வாழ்வும் இறையுணர்வும்

## பிறவி நோக்கு

பிறவி ஒவ்வொன்றின் ஒட்டு மொத்த நோக்கையும் குறிப்பிட்டால் அது, 'துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும்' என்பதே ஆகும்.

துன்பத்தில் இருந்து விடுபட வேண்டும் என்னும் துடிப்பு; இன்பத்தை அடைந்து துய்க்க வேண்டும் என்னும் தவிப்பு இவ்விரண்டுமே இறையுணர்வின் மூலங்களாகி நடையிடுகின்றன.

ஆறாம் அறிவு மாந்தர்க்குக் கீழ்ப்பட்ட ஐந்தாம் நான்காம் மூன்றாம் இரண்டாம் அறிவு உயிரிகளுக்குக் கூட, இவ்வியல்புகள் இருத்தலை நாம் அறியலாம்.

எரியின் வெப்பினை நெருங்கு முன்னரே எறும்பு உணர்ந்து, தான் ஒதுங்குவதுடன், பின்னே வரும் எறும்புகளும் ஒதுங்க வழிகாட்டுகின்றமையை நாம் அறியத்தானே செய்கிறோம்.

அதே எறும்பு எட்டா உயரத்தில் தொங்க விடப்பட்ட எண்ணெய், நெய், இனிப்பு, காரம் முதலியவற்றை முகர்வால் உணர்ந்து, வரிசை பிடித்துச் செல்வதும் நாம் காண்பது தானே!

எவ்வுயிரிகளும் தாம் துன்புற விரும்புவதில்லை, இன்புறவே விரும்புகின்றன; அவை மட்டுமல்ல; இன்பத்தை எப்பாடு பட்டும் தேடி அடையவே விரும்புகின்றன; இயங்குகின்றன; போராடுகின்றன; பெற்றடைந்து பேரின்பம் பெறுகின்றன; அல்லது அப்பேரின்பம் அடைதல் நோக்கிலேயே முடியவும் செய்கின்றன!

## கதிர் வழிபாடு

இருள்! இருளானால் எளிய இருள் அன்று; கையால் அள்ளிக் கொள்ளும் வகையில் கப்பிக் கிடக்கும் இருள். ஆனால், அவனையே அவனுக்குத் தெரியவில்லை; அவன் கையா தெரியும்? அவ்விருளை அள்ளும் இருள் மட்டும் தெரியுமா?

எங்கும் இருள்; எல்லாம் இருள்!

அம்மட்டோ! கொட்டோ கொட்டெனும் பனி! படுத்திருக்கும் வீடும் குடிசையும் தாங்கமாட்டாக் குளிர்! இருளும் குளிரும் தாங்கினாலும், கொல்லும் புலியும் அரிமாவும், ஊளையிடும் நரியும், பிளிறும் களிறும் அவன் இருக்கும் சூழலைச் சுற்றி முழங்கும் அச்சம்; ஏதோ விடிவு - சிறு வெளிச்சம் இருள் அகலல் ஒளிக்கதிர் வெளிவரல் செங்கதிர் விளக்கம் - முழு வட்டத் தங்கத்தகடு - வெள்ளி உருக்கு- வானில் கிளரக் கடலின் மேல் எழும் எழுச்சி!

அக்கதிரை - இருளையும் அச்சத்தையும் பனியையும் போக்கிய செங்கதிரை நோக்கிக் கையெடுக்கிறான். கை, தானே தலைமேல் செல்கின்றது. செம்மாந்து நிற்கிறான்! இவ்வொன்றன் வரவு என்னென்ன நலப்பாடுகளை எவ்வெவர்க்கும் காலமெல்லாம் தவறாமல், ‘இவர் அவர்’ எனப் பிரிவு பிளவு இல்லாமல், எல்லார்க்கும் பொதுமையாய்ப் பொலிவுகாட்டுகின்றது என்று வியந்து பாராட்டுகிறான்!

“ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்”

என்று போற்றுகிறான்! குறிஞ்சி நில வாணனில் தொடங்கி நெய்தல் வாணன் வரையுள்ள மாந்தன் நிலை இது. ஏன்? மற்றை மற்றை உயிரிகளின் நிலையும் கூட இதுவே!

## மதி வழிபாடு

ஞாயிறு மறைகிறதே! இனி இருள்கவ்வுமே! அதே அச்சம் வருமே! அதே நிலைக் குடிசையுள் ஒடுங்க வேண்டுமே! குகையுள் அடங்க வேண்டுமே! என்னும் நிலையில் ஓர் ஒளிக்கீற்று ஒளி செய்கின்றது. ஒவ்வொரு நாளும் வளர்கின்றது; அரைபாதி ஆகின்றது; மேலும் வளர்கின்றது; முழுமதியாக ஒளிமுகம் செய்கின்றது. மேல்பால் மறையும் கதிர்; கீழ்பால் எழும் கதிர்; வெங்கதிர் அது; தண்கதிர் இது; அவ்வளவு இல்லையானாலும் இருளை நீக்குகின்றது! இந்த முழுமதியும் எவர்க்கும் பொதுவாக - எவ்விடத்திற்கும் பொதுவாக - எவ்வுயிர்க்கும் பொதுவாக - எவர் வேண்டலும் தூண்டலும் இல்லாமல் எழுகின்றது; விழுகின்றது; என்று வியந்து

“திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்”

என்கிறான்! அவன் இயற்கை வழிபாடு இப்படி உருவாகின்றது!

# தீ வழிபாடு

வெளியே முழுமதி இருந்தாலும், வீட்டுள்ளே இருள் உள்ளதே! பகலில் தோன்றவில்லை என்றாலும் இரவில் தோன்றுகின்றதே இருள்!

இத்தகு நிலையில் மூங்கில் உராய்வாலும், கல்லும் கல்லும் தட்டலாலும் ஒளி பிறக்கக் கண்டு மகிழ்கிறான். செயற்கையாகத் தீக்கடை கோலைக் காண்கிறான். தீ மூட்டுகின்றான்! குளிரும் ஒழிகிறது; இருளும் அகல்கிறது; விலங்குகளும் அஞ்சி ஒதுங்குகின்றன. அதுவும் வணங்கத் தக்கதாக அவனுக்குத் தோன்றுகின்றது. அத் தீ சமைக்கவும், சுட்டு வாட்டவும் - குளிர் ஓட்டவும் - பயன்படலால் தீயையும் வணங்குகிறான். வீட்டுள் ஏற்றும் விளக்காகக் கண்டு குடும்பத்துடன் வழிபடவும் செய்கின்றான்.

"ஒளியே வாழி! உயர்வே வாழி!
அளியே வாழி! அறமே வாழி!
தெளிவே வாழி! திறமே வாழி!
களியே வாழி! கவினே வாழி!"

எனத் தீயையும், தீ வெளிப்பட்டு ஒளி செய்யும் விளக்கையும் வழிபடு பொருளாகக் கொள்கிறான்! வெளி ஒளி வீட்டொளியாய் வந்தது. அவனைக் களி துளும்ப வைக்கின்றது.

# மழை வழிபாடு

இவ் ஒளிகளை அன்றி, மற்றொன்றும் அவனைச் சிந்திக்க வைக்கின்றது. வெயில் காய்கின்றது; ஆவி கிளம்புகின்றது; வானில் படர்கின்றது; கருநிறம் கொள்கின்றது; கொட்டோ கொட்டெனப் பொழிகின்றது. அந்த நீரே குடிநீர், குளிநீர், பயிர்நீர்; இது உயிர்நீர்! எவ்வுயிரும் இந்நீர் இல்லாமல் வாழமுடியாது. எப்பயிரும் வாழமுடியாது; விளைவும் இல்லாமல் ஒழியும். இதுவும் இவர்க்கு அவர்க்கு என்று இல்லாமல் எல்லோர்க்கும் பொதுவாக இயல்கின்றது! எவர் வேண்டலும் தூண்டலும் இல்லாமல் தன்கடன் செய்கின்றது.

ஒளி போல மழையும் பொதுமையது என எண்ணி,

"மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!"

என வழிபடுகின்றான். இவ்வழிபாட்டின் விளக்கமே காளி, மாரி வழிபாடாம்.

## இயவுள்

கதிரும் மதியும் மழையும் விண்ணில் இருந்து இயங்குவதும் மண்ணுக்குப் பயன் செய்வதும் அப்பயனும் ஒருவர் வேண்டுதல் இல்லாமல் இவர் ஒருவருக்கு என்னாமல் எல்லார்க்கும் பொதுவாகக் கடனாற்றுதலையும், அவற்றுக்கும் மேலே மினுக்கு மினுக்கு என ஒளி காட்டும் **விண்மீன்** கூட்டங்களையும் கண்டு இவையெல்லாம் முட்டாமல் மோதாமல் தாம் தாமே செயலாற்றுதற்கு ஓர் ஆற்றல் இருக்கவேண்டும் என எண்ணுகிறான். அந்த இயக்குகின்ற ஆற்றல், தன்னினும் மேம்பட்டுத் தான் மதிக்கத்தக்கது என்று உணர்கிறான்! அவ்வுணர்வு வளர்ந்தநிலையில் **'இயவுள்'** - இயக்கும் ஆற்றல் எனப் பெயரிடுகிறான் அதனை!

## கடவுள்

வீடும் குடித்தனமும் ஆகிய அவன் ஒரு வீட்டில் இருந்து மற்றொரு வீட்டுக்குக் கடந்து செல்ல அமைத்தது கடவு. அவ்வாறு கடவுவதற்கு அல்லது இயக்குவதற்குரிய ஆற்றலைக் **'கடவுள்'** என்பதும் தகும் என நினைக்கிறான். கடந்தும் உள்ளும் இருப்பது கடவுள் என்பது பின்னைப் பொருள்! இயவுள் போலக் கடவுவது - செலுத்துவது - என்பது முன்னைப் பொருள்!

## இறை

அவ்விண்ணியல் காட்சி விழுமியன் ஒருவன், **'கணியன்'** எனப்பட்டான். அவன்கண், ஆழ்ந்து அறிய வல்ல நுண்ணோக்குக் கண் என எண்ணினான். அவனை, **'முதுகண்ணன்'** என்றான். அத்தகையன் ஒருவன் இவ்வாற்றல் எங்கே இருக்கிறது என எண்ணினான். எங்கே இருக்கிறது என்பது இல்லை! **'எங்கும் இருக்கிறது'** என முடிபு செய்தான்! ஓரிடத்து மட்டும் இருந்தால் எவ்விடத்தும் அதன் ஆளுமை செல்லாதே! எங்கும் எவற்றிலும் இருப்பது அது எனத் தெளிகிறான்.

எங்கும் இருப்பதற்கு என்ன பெயரிடலாம் என ஆழமாக எண்ணினான். எங்கும் தங்கியிருப்பது **'இறை'** என்றான்! இம்மூன்று சொற்களாலும்

எங்கும் தங்கியிருப்பது.
எல்லாவற்றையும் இயக்குவது
எவர்க்கும் பொதுமையானது

என முடிபு செய்தான். "இறை கூர்ந்த" என்பது புறப்பாடல் தொடர்.

## முதல்

அவன்முன், அவன் பெற்றோர் இருந்ததையும், அவர்களுக்குப் பெற்றோர் இருந்ததையும், அப்படியே முந்தி முந்திப் பெற்றோர் இருந்திருப்பர் என்பதையும் நினைத்தான். உலகிலுள்ள ஓரறிவு உயிரி முதல் ஆறறிவு உயிரி வரை உள்ள அனைத்துக்கும் முன்னையாம் **முதல்** ஒன்றிருந்திருக்க வேண்டும். அம்முதல் வழி வந்தவையே இன்றுள்ள உயிரிகள் எல்லாமும். அப்படியிருந்த மாந்தர்களுக்கும் ஆதிமுதலும் இருந்திருக்கவேண்டும்!

## பரன்பரை

எந்த ஒன்றும் பூ முதல் ஆண் பெண் என இரண்டாகவே உள. அவ்வாறே மாந்தர்க்கும் ஆதி முதல் 'ஆண் பெண்' எனப் பெற்றோர் கட்டாயம் இருந்திருக்கவேண்டும். அதனை இது எனச் சொல்ல முடியவில்லை! தந்தை தாய்; பாட்டன் பாட்டி; பூட்டன் பூட்டி; ஓட்டன் ஓட்டி; சேயோன், பழையோள் என்பவர் போல், பெயர் சொல்ல முடியாத அப்பாலுக்கு அப்பாலானவர். ஆதலால், அப்பாலுக்கு அப்பாலாம் அவர் **'பரன் பரை'** எனப்படுவார். பரம் என்பது அப்பாலுக்கு அப்பாலாய் இருப்பது. அப் பரன் - தந்தை; அப் பரை - தாய்! அவர்கள் வழியே வந்ததால் 'முதல்', 'ஆதிமுதல்' எனத் தக்கார் அவர் என்றனர்.

## பகவு, பகவன்

இன்னும் எண்ணினால் வியப்பாக உள்ளது!

காற்றே இல்லாத வெளிப்பகுதி!

காற்றுள்ள வளிப்பகுதி!

ஒளியுள்ள ஒளிப்பகுதி!

சூழ்ந்து நிற்கும் நீர்ப்பகுதி!

நீர்ப்பகுதிக்குட்பட்ட நிலப்பகுதி!

இப்படிப் பகுத்தமைத்தது எது? இவற்றின் கலப்பால் உலகை அமையச் செய்தது எது?

நிலத்திலேயும் புல், மரம், செடி, கொடி எனவும், மண்புழு, நீர்ப்பூச்சி எனவும் எறும்பு, சுரும்பு எனவும், நண்டு, மீன், முதலை எனவும், ஆடு மாடு, கரடி, புலி, யானை, பூனை எனவும் மக்கள் எனவும் பகுத்து வைத்தது எது?

இவற்றுக்கு எல்லாம், வாழத்தக்க உணவுகளை எல்லாம் உண்டாக்கித் தந்து தட்டில்லாமல் வாழத்தக்க வகையெல்லாம் செய்தது எது? என எண்ணிப் **பகுத்து வைத்ததாம்** அதன் பெயர் **'பகவு'** என்றும் வழங்கினான். மதித்துப் போற்றத்தக்க வணங்கத்தக்க-ஆற்றலாகவும் அருளாகவும் போற்றினான்!

இயவுள், கடவுள், இறை, முதல், பகவு என்பவை கண்ணால் காணமுடியாதவை. காட்டவும் முடியாதவை. இயல் செயல் காரண காரியம் ஆயவற்றால் உணர்வதே அன்றி, உருவு கண்டு சுட்டமுடியாதவை.

## வீர வழிபாடு

வாழ்வில் இவையெல்லாம் இருந்தும் இடர் இல்லாமல் இல்லை. மண் விண் தீ நீர் காற்று என்னும் இவை ஆக்கமும் செய்வன; அழிவும் செய்வன; எப்படி வந்தாலும், அழிவு அழிவு தானே!

துன்பும் துயரும் தாமே! அவற்றை நீக்கவல்ல துணிவாளன் வேண்டுமே! அவன் துணிவுச் செயலுக்குக் கருவியும் வேண்டுமே!

அயல்நாட்டார் படையெடுத்து வந்தால், தீயவர் கள்வர் துயர் செய்தால் அவற்றைத் தீர்க்க வேண்டுமே! அதற்கு அமைந்ததே **வீரவழிபாடு** ஆகும்.

வேல், யானைப் போர்க்குரியது.

வேல், என்பது படை அல்லது கருவி.

அதனை உடையவன் - பயன்படுத்தி நலம் செய்பவன் - வேலன். தீது நீக்கி நலமாக்கும் செவ்வியனும் விரும்பத் தக்கவனும் அவன் "சேயோன்" எனப்பட்டான். அவன் கருவியால், படைவீடுகள் வரலாயின! மலையில் கிளர்ந்து கடல் முதலாம் இடங்களிலும் படைவீடுகள் அமைந்தன. பின்னே படையொடு படையுடையவனையும் இணைத்தனர்!

## நடுகல்

அமரில் இறந்தவன் **அமரன்** ஆனான். அவ்வாறு இறந்தவர்கள் பொதுநலம் - நாட்டு நலம் - கருதிப் போர் செய்து இறந்தவர்கள். ஆதலால் அவர்கள் பெயர் பெருமை முதலியவற்றை ஒரு கல்லில் எழுதி மக்கள் போய்வரும் வழிகளில் அமைத்தும், பந்தர் செய்தும், கோயில எடுத்தும் வழிபட்டனர். அது **'நடுகல்'** வழிபாடு ஆயது.

எ. டு: "ஆடவர், பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலிசூட்டிய பிறங்கு நிலை நடுகல்" (அகம்.131)

"நடுகல் கைதொழுது பரவும்" (புறம். 306).

இனி, கணவன் இறக்க உணர்வால் ஒன்றி, அவனொடும் உயிரைப் போக்கத் தீப்பாய்ந்தார் உண்டு!

"தீப்பாய் அம்மை கோயில்"

என்பவை அத்தகையவை.

பசு மீட்டலில் இறந்தவன் பெயர் கொண்ட ஊர் 'ஆவட்டி' மதுரைவீரன், சங்கிலிமாடன் என்போர் எல்லாம் இவ்வாறு வீர வழிபாட்டால் தெய்வமாயவர்களாம்.

## கற்பு வழிபாடு

கற்பு வழிபாடு கண்ணகி கோயில் ஆயது. முழு முதல் வெற்றி தாய்வழி ஆயதால் கொற்றவை வழிபாடும் முந்துறவே எழுந்தது. அருள் வழிபாடாய்க் காளி, மாரி வழிபாடும் கிளர்ந்தது. இவ்வழிபாடும்

நடுகல் வழிபாடும் தொல்காப்பியத்தால் அறியப்படும்! சங்கச் சான்றோரும் சுட்டியதுண்டு! தொல்காப்பியர் நடுகல் வழிபாட்டை காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்தல் என அறுவகைப்படுத்திக் காட்டுவார். அதுவே, சிலப்பதிகார வஞ்சிக் காண்டப் பொருள் வைப்பு முறை ஆயது.

சிலம்பில் குன்றக்குரவை காட்சிக்காதை, கால்கோள்காதை, நீர்ப் படைக்காதை, நடுகற்காதை, வாழ்த்துக்காதை, வரந்தருகாதை என ஏழாக்கினார் இளங்கோவடிகள்.

இளங்கோவடிகள் காலத்திலேயே ஞாயிறு, திங்கள், மழை வழிபாடுகளும், சிவபெருமான், திருமால், முருகன், கொற்றவை, அருகன், புத்தன், பாசண்டச் சாத்தன் வழிபாடுகளும் இருந்தமையை அவரவர் நிலையில் நின்று பாடி வைத்தார்.

"உரைசால் பத்தினியை உயர்த்தோர் ஏத்துவர்" என்பதை நூலியற்றும் நோக்கங்கள் மூன்றனுள் ஒன்றாகக் கூறி அதனை நிறைவித்தவரும் அவர்.

## இல்லுறை தெய்வவழிபாடு

மேலும் இல்லுறை தெய்வ வழிபாடு எனக் குடும்ப முன்னவர் வழிபாட்டையும் சுட்டுகிறார் அவர்.

"அகநகர் எல்லாம் அரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல்மாய்ந்த
மாலை மணிவிளக்கம் காட்டி இரவிற்கோர்
கோலம் கொடியிடையார் தாம் கொள்ள"

என்கிறார். "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே" என்பது முந்தையர் வழிபாடாம்.

## கோயில்

கதிரவன் கோயில், நிலவுக் கோயில், பிறைதொழல், தீர்த்தமாடல் என்பனவெல்லாம் நிகழ்ந்தமை குறிக்கிறார் இளங்கோ. தொல்காப்பியர் குறிஞ்சி முதலிய நிலத் தெய்வ வழிபாட்டைச் சுட்டுகிறார்.

சேயோன் - குறிஞ்சி நிலத் தெய்வம்.

மாயோன் - முல்லை நிலத் தெய்வம்.

வேந்தன் - மருத நிலத் தெய்வம்.

வருணன் - நெய்தல் நிலத் தெய்வம்.

கொற்றவை - பாலை நிலத் தெய்வம்

என்பவை அவை.

## பாட்டு தொகை

முருகன், சிவன், திருமால் பற்றிய கடவுள் வாழ்த்துப் பாடல்கள் பத்துப் பாட்டிலும் எட்டுத் தொகையிலும் இடம் பெற்றன. பாரதம் பாடிய பெருந்தேவனார், நக்கீரனார் என்பவராலும் பாடப்பட்டவை.

திருமாலைப் பற்றிய பாடல்களும், செவ்வேள் பற்றிய பாடல்களும் பரிபாடலில் பெருவரவாயின.

ஆரியமாகிய வேதியம் புகுந்து பூதவேள்வி வழிபாடாயது. மூலவர் மட்டுமே இருந்த கோயில்கள் அம்மை, முருகன், பிள்ளையார், ஒன்பான் கோள், ஐயப்பன் எனப் பல கோயில்களாக்கப்பட்டு ஒருமைப்பாட்டு நிலையை இழந்தது. புனைகதைகள், தொன்மங்கள், திருவிளையாடல்கள் என இயற்கை வழிபாடும், முழு முதல் வழிபாடும் சீரழிந்தன; சீரழிந்து சிதைந்தன.

காவடி எடுத்தல், தீமிதி (பூக்குழி), உயிர்ப் பலியூட்டு, கயிறுகுத்தல், தேரிழுப்பு எனச் சடங்கும் பொழுது போக்கும் ஆயின.

## தேவாரம் முதலன

தேவார மூவர் திருக்கோயில் தோறும் சென்று பாடினர்; திருவாசகம் கிளர்ந்தது. திருவிசைப்பா, திருப்புகழ் என்பவை பெருமை மிக்க அடியார்களால் பாடப்பட்டன. பெரியாழ்வார் முதலான ஆழ்வார் பன்னிருவர் பாடிய நாலாயிரப் பிரபந்தம் மாலியக் கோயில்களில் முதலாழ்வார் கால முதல் பாடு புகழ் பெற்றன.

வெள்ளப் பெருக்காக வார, வரி, கீர்த்தனைப் பாடல்கள் கிளர்ந்தாலும் ஆள்பவர் துணையால் கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் வடமொழி அருச்சனை புகுந்தது. வார வரிப்பாடல் விண்ணப்பம்

வீழ்ந்தது. தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி ஏந்திய கைகள் தேங்காய், பழம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டன.

இயவுள், கடவுள், இறை, முதல், பகவன் என்னும் நிலையில் இருந்து 'ஆண்டவன்' என்னும் நிலை ஆயிற்று.

ஆண்டவன் என்பான் ஆட்சிபுரிந்த அரசன். மன்னனைக் காணல் மாலைக் காணல் என ஒப்பாயிற்று.

# இந்திர வழிபாடு

மருத நிலத் தலைவன் வேந்தன் என்று வழங்கியமை அறிந்தோம். அவ்வேந்தன், முடிவேய்ந்த மன்னன் என்று ஆக்கப்பட்டான்.

தொன்ம நோக்கர் வேந்தனை இந்திரன் என்றனர். அவன் தேவர்களின் தலைவனாகக் கொள்ளப்பட்டு இந்திரவிழா எடுத்தனர்.

இந்திரவிழா ஒருமாத அளவு நகரே, பொழிலே, ஆறே, கடற்கானலே, கடலே என நிகழ்ந்து நிறைவுறும். மழை மிகப்பொழிந்து அப்பொழிவு நிறைந்த மார்கழி விழாவாக அது நிகழ்ந்தது.

மார்கழி இறுதிநாள் இந்திரவிழாவின் நிறைவுநாள். அடுத்தநாள் தைப் பிறப்பாம் பொங்கல் நாள். அது தென் செலவு சென்ற கதிரோன் வடக்கே திரும்பும் நன்னாளாகக் கொண்டும், மண்ணின் வளம் எல்லாம் வீடு வந்து சேர்ந்த நிறைவு கொண்டும் பொங்கல் விழா எடுத்தனர்.

இன்றும் தைப்பொங்கலுக்கு முதல்நாள் போகிப் பண்டிகை கொண்டாவது அதன் வழிப்பட்டதேயாம்.

**போகி** என்பதன் பொருள் வேந்தனாம் இந்திரனாம். குடிமக்களுக்குத் தட்டுப்பாடு இருந்தாலும் வேந்தனுக்கு தட்டுப்பாடும் முட்டுப்பாடும் இல்லாமல் வேண்டிய போகங்களை - நுகர்வுகளை - அடையலாம். ஆதலால் அவனைப் போகி என்றனர்.

அதன்பொருளை அறியாதார் போக்க வேண்டுவனவாம் பழம் பொருள்களை வீட்டைவிட்டு அகற்றுவதே - போக்குவதே - போகியாகக் கொண்டனர்.

# பொங்கல்

பொங்கல் விழா, கதிருக்கும் மழைக்கும், மண்ணுக்கும், உழைப்புக்கும், உழைத்த விலங்குகளுக்கும் எடுக்கும் விழாவாகக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் வேந்தன் ஆள்பவனாக - கோவாக - கோவேந்தனாக இருந்ததால் அவன் அரண்மனை கோயில் எனப்பட்டது. அவன் மனையை இறைவனுக்குத் தந்ததால் அவனும் இறைவன் எனவும் பெயர் பெற்றான்.

அவனுக்குரிய பிறந்தநாள், மணநாள், முடிசூட்டு நாள், தேருலா, பள்ளி எழுச்சி, பள்ளியறைத் துயில், படையல் என்பனவெல்லாம் இறைவனுக்குத் தரப்பட்ட நிலையில் இறைவன் 'ஆண்டவன்' எனப்பட்டான்.

இம்மண்ணின் ஆண்டவன் பெயர், இம்மண்ணுக்கு வெளியே இருந்து வந்த கிறித்தவம், இசுலாம் ஆகிய சமயங்களுக்கும் ஆயது.

அதனாலேயே பழனியாண்டவர் கிறித்து ஆண்டவர், நாகூர் ஆண்டவர், போப்பாண்டவர் என்றெல்லாம் விரிவுற்றன.

# தெய்வம் கருப்பொருள்

கல்லைத் தேய்த்தல் மூங்கில் உராய்தல் தீக்கடை கோலால் தீ உண்டாக்கல் நேர்ந்ததும் அதனை வழிபட்டதும் பற்றி அறிந்தோம்.

தீ, குளிர் போக்கவும், சமைக்கவும் பயன் பட்டமையால் இனிமைப் பொருள் தந்தது. தேன், தேமொழி, தேநீர் என்பவை அறிக.

தீ இயற்கை வகையாலும் செயற்கை வகையாலும் உண்டாக்கப் பட்டமையால் கருக்கொண்ட பொருள் ஆயிற்று. அதன் பழமை, தொல்காப்பியத்தில், "தெய்வம் உணாவே மா மரம் புள் பறை" என வருவனவற்றால் மாந்தர் உண்டாக்கியது அல்லது இயற்கை வழியால் உண்டாயது என்பது புலப்படும்.

**"குனித்த புருவமும் கொவ்வைச்**
**செவ்வாயில் குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவழம்போல்**

**மேனியில் பால் வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்த**
**பொற் பாதமும் ."**

என நாவுக்கரசர் பாடுகிறார். பிறர் பிறரும் பாடுகின்றனர். மாந்தர், கல், சுதை, துணி, தாள், சுவர் முதலியவற்றில் அவ்வுருவை வனப்புறப் படைக்கின்றனர்.

தமிழ் என்பது மக்கள் உண்டாக்கிய தொடர்புப் பொருளே. உருவமிலா அதனைத் தாய் என்றும் தெய்வம் என்றும் வழிபடுகின்றோம்.

தமிழில் விளங்கும் குண்டலகேசி, வளையாபதி, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி, திருக்குறள் என்பனவற்றை எண்ணிய படைப்பாளி, குண்டலம், வளையல், முடிமணி, சிலம்பு, இடையணி, செங்கோல் என அணிகலங்களாகவும் அறக் கோலாகவும் படைத்துவிட்டனர்.

**"காதொளிரும் குண்டலமும் கைக்குவளை**
**யாபதியும் கருணை மார்பின்**
**மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில்**
**மேகலையும் சிலம்பார் இன்பப்**
**போதொளிர் பூந்தாளிணையும் பொன்முடி**
**சூளாமணியும் பொலியச் சூடி**
**நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்**
**தாங்குதமிழ் நீடு வாழ்க"**

எனச் சுத்தானந்த பாரதியாரால் பாடப்பட்டது தெய்வம் கருப்பொருள் என்பதற்குரிய சான்றாம்.

## விண்ணப்பித்தல்

பழங்கோயில்களில் திருக்கை கோட்டி என்னும் புகுவாய் மண்டபம் ஒன்று அமைத்துத் தேவாரம் திருவாசகம் முதலியவை எழுதவும் படி எடுக்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் செய்தனர்.

இவ்வளவு செய்தாலும் மூவேந்தரும் ஆரிய வேள்வி மயக்கிலும், வேதிய அருச்சனை மயக்கிலும் ஒன்றிவிட்டனர்.

தேவார விண்ணப்பம் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு முற்றிலும் ஒழிக்கும் முயற்சியில் ஊன்றினர்.

## தேவார ஒழிப்பு

தில்லைக் கோயிலில் தேவாரம் சேமிக்கப்பட்ட பண்டாரத்தில் கதவு திறக்கப்படாமலே நெடுநாள் காற்றும் புகாமல் கறையான் புகுந்தழிக்க நேர்ந்தது. அதனை உணர்ந்த இறையுணர்வர் தூண்டியும் வேதியம் தடுத்து நின்றது. முற்றிலும் கெடுக்கவே முனைந்தது. அந்நிலையில் இராசராசன் மீட்டெடுக்க முயன்ற முயற்சி கண்டு, 'மூவர் முதலிகள் திருக்காப்பிட்ட பண்டாரம் அது' அவர்கள் வந்தாலே திறக்கலாம் என ஆணையிட அச்சூழ்ச்சியை அறிந்த இராசராசன் மூவர் முதலிகள் திருவுருவைக் கொணர்ந்து மூவர் முதலிகள் எய்தினர் என மேலும் தடையிட அறியாராய்த் திருக்கதவம் திறக்கக் கறையான் மலையாய்க் கூடுகட்டி மூடுண்டு கிடக்கக்கண்டு அவற்றைத் தக்கவகையால் போக்கி அகப்பட்டவற்றை எடுத்தான். அவ்வாறு எடுக்கப்பட்ட அருமைப் பாடுடையதே தேவாரம்! அதனையும் அத்திருக்கோயில் கருவறை ஏறப்பொறாராய் வேதியர் வெளித்தள்ளினர்.

## அருச்சனை

தஞ்சைப் பெரிய கோயிலில் 48 பேர்கள் திருப்பதியம் விண்ணப்பிக்க வைத்தான் இராசராசன், அருச்சனை செய்ய ஒருவனையும் விட்டான். அவ்வொருவனாம் வேதிய முதலை, 48 திருப்பதிய ஓதுவாராம் யானைகளை வீழ்த்தியதை அன்றி இன்று வரை கருவறை புகா வெறுவறையாகவே ஆக்கப் பட்டுள்ளன! கொண்டவன் துணையிருந்தால் என்ன கும்மாளமும் போடலாம் என்றபடி வல்லாண்மையால் வார, வரிப்பாடல் முதலாம் தமிழ் முறைப் பாடல்கள் தீண்டப் படாதவை ஆக்கப்பட்டன! சிவனிய மடங்களும், மடங்களாய் ஒத்தூதி உணர்வாளர் முயன்றாலும் முடியா நிலையிலேயே கிடையாகி விட்டன.

சிவனிய, மாலிய, குமர, அம்மை வழிபாட்டாளரும், சிற்றூர்ச் சிறுதெய்வ வழிபாட்டாளரைத் தீண்டாரும் காணாரும் ஆக்கிக் கெடுத்த வேதியம் தான் கிறித்தவம் இசுலாமிய வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் மூலமாகியவர் என்பதை மெய்ப்படச் செய்தனர். புரியாமொழியில் தள்ளுகடைப்பட்டான் ஒட்டிக் கொண்டு கிடப்பானா?

தெய்வத்தைக் கருப்பொருளாகக் கண்டு காட்டிய தொல்காப்பியர், தெய்வம் உணாவே என்றார். தெய்வத்தைக் கருப்பொருள்களுள் முன்னாக வைத்து உணவை அடுத்து வைத்தது. தெய்வவழிபாடு செய்து படைத்து அதனை உண்ணல் என்னும் எண்ணம் உண்டாயிற்று.

உணவுப்பொருள், வேட்டையால் வந்ததும் விளைவால் வந்ததுமாம் என இருவகைய.

முன்னது வல்லுணவு; பின்னது புல்லுணவு.

வல்லுணவு உண்பான் அதனைப் படைத்து உண்டான்.

புல்லுணவு உண்பான் இதனைப் படைத்து உண்டான்.

புல்லுணவு உண்பான் வல்லுணவு கொள்ளாமை உண்டு.

வல்லுணவு உண்பான் புல்லுணவு கொள்ளாமை இல்லை.

இற்றை உணவு விடுதிகளே சான்று!

தெய்வத்திற்குத் தான் உண்ணும் உணவைப் படைத்தவன், தன் வேந்தனுக்காகவும், தன் கொள்கைக்காகவும் தன்னையே தான் படைக்கவும் துணிந்தான். மற்றவர் உயிர்ப்பலி இட்டனர்.

ஆடு, கோழி, எருமை, பசு, குதிரை எனப் படைத்தனர். வேள்வியில் இட்டு யாம் உண்ணேம் என்பாரும் வேள்விப் புலவு உண்டனர். எஞ்சியதைப் பிறர்க்குத் தராமல் புதைக்கவும் செய்தனர்.

'குழவி பலி' என்பது வறியவர் வீட்டுக் குழந்தைகளுக்கு வளமையர் வீட்டில் தரும் பிள்ளையுணவாம் சோறு. குழவி பலி எனப்பட்டது. அதனைக் குழவிப்பலியாக்கி விட்ட கொடுமையும் உண்டாயிற்று.

வெற்றி முரசுக்குப் பலியிடல் பழவழக்கு.

"உயிர்ப்பலி உண்ட மயிர்க்கண் முரசம்"

என்பது பழம் படையல் சான்று.

புல்லுணவு உண்பார் பூப்பலி இட்டனர்; நீர்ப்பலி இட்டனர்; சோற்றுப் பலி இட்டனர். கோயில்களில் பலிபீடங்கள் அமைந்தன.

சமயக் காழ்ப்பால் வாதிட்டது பழமையானது.

புலமைக் காழ்ப்பால் வாதிட்டுக் காதறுத்தல், முடியறுத்தல், மொட்டையடித்தல், குட்டுதல் என்பவை அவை.

சமயக் காழ்ப்பின் உச்சக்கேடு அயற்சமயத்தாரை ஆடுமாடுகள் போல் வெட்டிக் குத்தி அழித்தலாம்.

அருக சமயம் கொல்லாமையையும் புலால் உண்ணாமையையும் ஈரறங்களாகப் போற்றியது.

புத்தசமயம் கொல்லாமை அறம் கொண்டது. பிறர் கொன்ற புலாலை விலாப்புடைக்க உண்டலை மேற்கொண்டது.

சிவனிய வாது சமணரைக் கழுவேற்றியது இட்டுக் கட்டலே எனினும் சிவனியச் சால்பிலாத சிறுமையேயாம்!

"சமணர்தம் திறங்களைச் சிந்தவாது செய்து நின்ற கோலம்" எனப்பட்ட பாடவேறுபாட்டுக் கதை என்பர் (ஞானசூரியன்). திரு.வி.க. அருளுள்ளம் இக்கொடுமையை ஏற்காது. 'கொலை மறுத்தல்' சமயம் செய்ய ஒப்புமா இச்சிறுமை?

சமைப்பது எப்படிப் பக்குவப் படுத்துதலோ, சமைவது என்பது எப்படிப் பக்குவப்படலோ அவை போலப் பக்குவப்படுத்த வந்தவை சமயங்கள். அவை 'சமையல்' அளவில் நின்று பயனென்?

ஆன்ம நேய உருக்கத்தில் எழுந்ததாம் பொதுநிலை (சன்மார்க்கம்) பசியகற்றல் என்னும் அளவில் நின்றுவிடல் சாலுமா? வெறும் வெட்டியர்க்கு உணவு வழங்குதல், உழைக்கும் கையை ஒழித்து ஒடுக்கும் கையாய் - பிச்சை எடுக்கும் கையாய் - ஆக்குவதற்கோ பயன்படவேண்டும்! மானம் அழிக்கும் மாக்கேடும் ஆக்கும் அல்லவோ அது!

வாக்குக்காகக் குடியைக் கெடுக்கும் குடியைக் கொடுத்துச் சிந்தனையையும் உழைப்பையும் மானத்தையும் உடல்நலம் உளநலம் ஆகிய பலவற்றையும் கெடுக்கும் இலவயம் அரசு எழுத்துப்படி, வீட்டையும் கெடுக்கும்; நாட்டையும் கெடுக்கும் தானே! தெரிந்து கொண்டே தீக்குள் தள்ளுவார் தீயினும் தீயர் அல்லரோ!

பனிப்பகுதி - துருவப்பகுதி - வாழ்வார்க்கு மீனுணவே உணவு! அன்றி விளைவொன்றும் இல்லை! அவர்க்கு இக்கொள்கை - புலால் உண்ணாக் கொள்கை பொருந்துமா? என்பார். குற்றத்தைக் குறுக்குவழியால் அழித்துவிடப் பார்ப்பவராம்! சொல்பவர் பனிப்பகுதியரா? பனிப்பகுதியர்க்கெனச் சொல்வதா இது?

வெள்ளி, செவ்வாய் புலவுணவு தெய்வத்தின் பெயரால் நீங்கள் கொள்வது இல்லை அல்லவா!

அன்றி நோன்பு நாள் எனக்கொண்டு புலவூண் கொள்வது இல்லை அல்லவா!

அந்த நாள் பிறவி வேறு, மற்றை நாள் பிறவி வேறா?

வெள்ளி, செவ்வாய், நோன்பு நாள்களில் புலவூண் கொள்ளாக் கட்டொழுங்கை மற்றை நாளும் கொண்டால் என்ன?

அந்நாட்களில் கொண்ட கடைப்பிடியை எல்லா நாளும் கொண்டால் என்ன கேடு? நலமிகுதி தானே!

இன்னும் நீங்கள் புலால் உண்டால் வாழ்வு நீடிக்காது என மருத்துவர் சொன்னால் கேட்க வேண்டியுள்ளதே! அதை நாமே கொண்டால் என்ன?

நம் உயிர் மேல் நமக்கு எவ்வளவு காதல்! அப்படித்தானே அவ்வுயிர்களுக்கும் உயிர்வாழக் காதல் இருக்கும்?

இல்லை, போக்கிய உயிரை மீள ஆக்கிவிட முடியுமா?

முடியை வெட்டினால் வளரும்!

நகம் வெட்டினால் வளரும்!

உயிரும் அப்படி உடலைச் சிதைத்தாலும் வளருமா? வாழுமா?

"வாழும் உயிரை வாங்கிவிடல் - இம்
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்!
வீழும் உடலை எழுப்புதலோ - ஒரு
வேந்தன் நினைக்கினும் ஆகாதையா"

என வேந்தன் பிம்பிசாரனுக்குப் புத்தனாம் அறிவ வேந்தன் உரைத்ததாகக் கவிமணி பாடுகிறாரே!

தெய்வத்தை 'அருள்மிகு' என அடைதந்து வழங்கலும், அடியார்களை 'அருள்திரு' என அடைதந்து வழங்கலும் நடைமுறை.

தம்மைத் தெய்வமேறியவராகக் காட்டி மருளாடுதல், இன்று காண்பது. பண்டே வேலன் வெறியாடல் இருந்தது. 'சாமியாடல்' எனல் மக்கள் வழக்கு.

மருளாடி கூறும் வாக்கு தெய்வ வாக்கு என மக்கள் நம்புதல் அவர்கள் அறிவறியாப் பார்வை.

இவ்வகையைச் சேர்ந்ததே நூலில் கயிறிடல், நூலில் வரும் செய்தி கொண்டு முடிவெடுத்தல், பூக்கட்டிப் போட்டுப் பார்த்தல், கிளியைக் கொண்டு சீட்டெடுத்தல், பல்லி சாத்திரம், கணியம் அறியாச் சோதிடப் பொய்மை நம்புதல், சகுனம் பார்த்தல், உருவிலி (அசரீரி) ஒலி கேட்டல், கனவுக்குப் பொருள் காணல், வலம்துடி இடந்துடி என்பவை எல்லாம் நம்பிக்கை என்னும் அறுகயிற்று மேல் நடையிடும் செயலாகும்.

உடல்நலம் கருதிய அமைப்பு மனையமைப்பு. அதைப் போலிச் சாத்திரமாக்கி இடித்து இடித்துக் கட்டி உள்ளதை இழந்த உணர்விலார் உள்ளமை கண்கூடு.

இறை நம்பிக்கை தன்னம்பிக்கை உடையார் செய்கைகள் அல்ல இவை. மண்ணில் கண் மூடியாகக் கிடப்பவன் எத்தனை கற்று அறிவியல் வல்லானாய் விண்ணேறிப் பறந்தாலும் நிலவு மண்டலம் செவ்வாய் மண்டலம் கண்டாலும் கண்மூடித் தனத்தை விடாமை கண்மூடித்தனம் என்று தெரிந்து கொண்டு, கண்மூடிகளாகக் கிடப்போர் என்றும் கண்ணைத் திறவாராகவே கிடக்கவேண்டும் என்னும் சூழ்ச்சியால் செய்வதாம்.

'ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி பாம்பு இரண்டு நல்லநல்ல, அடியார்க்கு மிகவே நல்லநல்ல' என்று அடியாருள் தலைப்பட்டு நிற்கும் ஞானசம்பந்தர் சொன்னாலும் அவரைத் தெய்வமாகப் போற்றுவாரும் கொள்ளார்! ஏன்? பிறர் கண்ணைத் திறந்தால் தம் ஏமாற்று வெளிப்பட்டு விடுமே! ஏய்த்து வாழும் வாழ்வு கெட்டுவிடுமே என்பதுதான் அடிப்படையாம்!

இறையருளால் இறைநிலை உறலாம் என்ற ஆழ்ந்த உருக்கமாய அடியர் பல உத்திகளை மேற்கொண்டனர். அவருள் மணிவாசகரும் வள்ளலாரும் சுட்டத்தக்கார். இறையே தாமாய், தாமே இறையாய் ஆகலாம் எனக் கண்டவர்.

தொண்டன், தோழன், பிள்ளை, இறைமை எனக் கண்டனர். பால் நினைந்தூட்டும் தாயாய், எடுத்தணைக்கும் தந்தையாய்க் கண்டனர்.

உருகி உருகி நின்றவர் அவர்; உரிமை உறவு பூண்டவர் அவர்; தொண்டால், அடிமையால் அடையலாம் எனக் கண்டவர் சிலர். கழுவாயால் இறையருள் எய்தலாம் எனக் கண்டமை வழுவாய் பெருக வழி செய்வதாயிற்று. எவ்விழிவும் செய்யலாம்; கழுவாய் உண்டு என்னும் கடைவழி தலைவழியாயது.

தமிழ்நெறியைத் தலைகீழாகப் புரட்டியது. வேதியம் பிழைக்கச் செய்த பிழைவழி அஃதாம்! கணியமோ கட்டிப்பிடித்துக் கொண்டு கைப்பறி செய்தது; புலமையாளர் சாவிப்பு, சாவிப்பு நீக்கப் புனைவுகளைப் பாடிப் பாடு புகழாளர் ஆயினர்!

"எற்றென் றிரங்குவ செய்யற்க"

என்றும் அப்படிச் செய்ததை உணர்ந்தால்,

"மற்றன்ன செய்யாமை" கொள்க! என்றும்,

"செய்ந்நன்றி கொன்றார்க்கு உய்வு இல்லை"

என்றும் தமிழறம் சொல்லியது!

கழுவாய் கதைத்தவர் மன்னர்களையும், செல்வர்களையும் அறிவறியாரையும் மயக்கித் தானம், உத்தமதானம், மகாதானம்,

மங்கலம், திருமங்கலம், அகரம், அகரஅகரம் என ஊர் ஊராகக் கழுவாய் வகையால் பெற்று வளமிக்க ஆற்றுப் பகுதிகளை எல்லாம் கொண்டனர். உழைப்பவர் கடையராகத் தள்ளப்பட்டனர்.

வறுமை, நோய், குறைப் பிறவி என்பவற்றை வினைப்படுத்தியும் தெய்வக்குற்றம் ஆக்கியும் மயக்கினர்.

மருத்துவம் கணியம் என்பவற்றைத் தெய்வத்தொடும் இணைத்துக் கழுவாய்களும் செய்வித்தனர்.

ஏமாற்றுகளில் எல்லாம் பெரிய ஏமாற்று வடமொழி தெய்வ மொழி என்றும் அருச்சகர் தெய்வப் பிறவியாம் பூசுரர் என்றும் கூறி நம்ப வைத்தது ஆகும். அதன் வழிப்பட்டதே, வருணப்பிரிவை அறமாக்கிய மாப்பெருங் கொடுமை!

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும்,

தமிழறம் தாழ்குழியுள் இட்டு மூடுண்ட நிலை இஃதாயிற்று. நந்தனார், திருப்பாணாழ்வார் போலும் ஈடிணை இல்லா அடியாரையும் தீண்டாரும் காணாரும் ஆக்கியதாம்.

தீயுள் இறங்கியபின் அந்தணரானார் நந்தனாரும் திருப்பாணாழ்வாரும் என்றால் என்ன பொருள்?

சாதிமைப் புற்று புரையோடிய நிலை இது.

அருளாளர் இராமாநுசர் நிலை போற்றத்தக்கதாக இருந்தது. அதனால் பயனென்ன? எவர் ஏற்றார்?

நந்தனார் நேரே இறைவடிவைக் காணத் தடையாய கல் ஏறும் (காளையும்) விலகியதாம்! கல்நெஞ்சம் விலகியதா? இல்லையே!

தெய்வம் அடியார்க்கு இன்ன இன்ன செய்தது! அடியார்கள் இன்ன இன்ன தெய்வத்திற்குச் செய்தனர். நேரே வீடுபேறு பெற்றனர்; பாவம் செய்தோர் - நம்புதல் இல்லாதோர் - கொடிய நரகம் புக்கனர் என்றெல்லாம் நேரே வீட்டுலகில் இருந்து வந்தவர் போலவும், நரகத்தில் இருந்து வந்தவர் போலவும், ஏழ் பிறப்பும் ஏழேழ் பிறப்பும் முற்றுற அறிந்தவர் போலவும், இவர் ஆணையிட்டால் இறையே முன்னின்று

கடனாற்றுவது போலவும் சமயங்கள் மக்களை மயக்கின. இன்ன சமயம் என்னாமல் எல்லாச் சமயங்களும் இவ்வேலையில் இறங்கின. மதம் பெருகி முட்டின மோதின வெட்டின சாய்த்தன நாடுநாடாக! இவை இறைவன் ஏவல் எனவும் கூறிக் கொண்டனர். இதனை விரிப்பது சமயத்தவர் உள்ளம் வெதுப்பும் என்பதால், நிகழ்வுகளின் பொய்ம்மை களையும் ஏமாற்றுகளையும் தந்நலத்தையும் குறிப்பிடாமல் எச்சமயமும் இத்தகு புனைவுகளில் இருந்து விலக்கில்லாமல் ஈடுபட்டு நின்றன. அறிவாளர்கள் பாவலர்கள் பரப்பாளர்கள் போலிமையர் ஆங்காங்கு இத்தொண்டுக்கு உதவினர்.

ஆனால் சிவனிய மாலியச் சமயங்களாம் தமிழர் சமயங்கள் செய்யாத மருத்துவம், கல்வி, சாதி ஒழிப்பு, சமன்மை என்பவற்றில் வழிகாட்டியாக இருந்ததும், கலைகள் கல்வெட்டுகள் ஆயவற்றைச் சிதையாமல் காத்ததும் நம்மை அடிமைப் படுத்திச் செய்யாச் சிறுமைகள் எல்லாம் செய்த ஆங்கில வழிக் கிறித்தவ சமயமே என்பது உண்மையாம்.

முழுமுதல் வழிபாடே நிகழ்ந்த தமிழ்ச் சமயத்தை முழுதுற ஆரியப்படுத்திப் பன்முக வழிபாடாக்கி 'தேவ பாடையே பாடை' என ஆக்கிய சிறுமையில் இருந்து விடுபட எண்ணியவர் முன்னுற வாழ்ந்த வள்ளுவர். அவர் வழியைப் பற்றிக் கொண்டவர் வள்ளலார்!

ஏறாத நிலையில் ஏறிய இப்பெருமக்கள் தோன்றியும் மக்களைச் சென்றடையவில்லை. மூடிய கண்களைத் திறக்கவிடாமல் தந்நலத்தாரும் திட்டமிட்டுச் செயலாற்றினர்.

கோயில் பெயர் மாற்றம், தெய்வப் பெயர் மாற்றம், ஊர், ஆறு, மலைப் பெயர்களின் மாற்றம், பிள்ளைகளின் பெயர்களைத் தமிழ்மையில் இருந்து முழுதுற ஒழித்து விடும் திட்டம், அதற்குத் துணைநிற்கும் மேலையாரிய வழிக்கல்வி, திரவிட ஆட்சித் தீமை எல்லாமும் கூடி நின்று தமிழின மொழி ஒழிப்புகளைத் தொடர்ந்து செய்கின்றன. செய்தும் வருகின்றன.

பரிபாடலில் செவ்வேள் முன்னர் நின்று,

"நின்பால் யாஅம் இரப்பவை

பொன்னும் பொருளும் போகமும் அல்ல
அன்பும் அருளும் அறமும்இம் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே"

என்னும் அருமை வேண்டல் இன்று கோயிலில் உண்டா?

காக்க காக்க தலைமுடி காக்க, தலையைக் காக்க, நெற்றியைக் காக்க, புருவம் காக்க எனத் தொடங்கி, உள்ளங்கால் வரை காக்க வேண்டும் என்னும் கவசச் சிறுமை கால்வைத்தது எப்படி?

புரியா நாமாவளி ஓதி ஓதி ஒழித்த கேட்டின் வழியது தானே!

இலக்கணம் எதற்கு? இலக்கியம் எதற்கு? நாமாவளி சொன்னால் மட்டும் போதுமே என்ற ஆதிசங்கரர் பெயரால் எத்தனை கல்வி நிறுவனங்கள்!

ஏன் சங்கரரைக் கைவிட்டனர்? காலத்துக்கு உதவாது எனக் கண்ட ஆரியம் அல்லது வேதியம் தன் வாழ்வை விட விரும்பவில்லை! தமிழமூடம் அதனை எண்ணிப் பார்க்குமா?

ஆறுகள் எல்லாமும் ஒரு கடலை அடைவது போல் எல்லாச் சமயங்களும் ஓர் இறையையே அடைகின்றன என்பதால்,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமரங்காள்"

என்றும்,

"வேறுமோர் சமயம் செய்தாலும் எம்பிராற்கு ஏற்கும்"

என்றும்,

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்றும்,

"மூவரும் ஒருவராம் மூர்த்தி"

என்றும்,

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

"அன்பர்பணிசெய்ய எனைஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்றும் பாடிய பேரருளாளர் நிலை என்றுதான் தமிழர் செவியுள் விழுமோ தெரிந்திலது.

தெரியக்கூடாது என்பதற்காகத் தானே,

தேவார, திருவாசக, நாலாயிரப்பனுவல், திருப்புகழ், திருவருட்பா முதலியவை ஏந்தாமல்,

தேங்காய் பழத்தட்டு ஏந்திக் கொண்டு போக வைத்த பாழ்நிலை!
வள்ளுவக் கடவுள் வாழ்த்து அசைக்கவில்லை!
சித்தர் பாடல்கள் சிந்தையைத் திறக்கவில்லை!
மணிவாசகர் மணிமொழி உருக்கவில்லை!
தாயுமானார் உள்ளம் பொங்கி வழியவில்லை!

"அருவி விட்டு அங்கணத்து மூழ்குவேன்
மூழ்கியே கிடப்பேன் என்பாரை"

"புறந்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும்"

என்பது புரிய வைக்குமா?

தமிழர் கண்ட இறைமை - இயற்கையோடு இயைந்த இறைமை என்று தலையெடுக்குமோ அன்றே நாம் அடியார்களைக் கண்டு கையெடுத்து வணங்கும் காலமாக விரைந்து வருமாக!

**வாழிய நலனே! வாழிய நிலனே!**

❖ ❖ ❖

முழுமுதல் வழிபாடே நிகழ்ந்த தமிழ்ச் சமயத்தை முழுதுற ஆரியப்படுத்திப் பன்முக வழிபாடாக்கி 'தேவ பாடையே பாடை' என ஆக்கிய சிறுமையில் இருந்து விடுபட எண்ணியவர் முன்னுற வாழ்ந்த வள்ளுவர். அவர் வழியைப் பற்றிக் கொண்டவர் வள்ளலார்!

ஏறாத நிலையில் ஏறிய இப்பெருமக்கள் தோன்றியும் மக்களைச் சென்றடையவில்லை. மூடிய கண்களைத் திறக்கவிடாமல் தந்நலத்தாரும் திட்டமிட்டுச் செயலாற்றினர்.

கோயில் பெயர் மாற்றம், தெய்வப் பெயர் மாற்றம் ஊர், ஆறு, மலைப் பெயர்களின் மாற்றம், பிள்ளைகளின் பெயர்களைத் தமிழ்மையில் இருந்து முழுதுற ஒழித்து விடும் திட்டம், அதற்குத் துணைநிற்கும் மேலையாரிய வழிக்கல்வி, திரவிட ஆட்சித் தீமை எல்லாமும் கூடி நின்று தமிழின மொழி ஒழிப்புகளைத் தொடர்ந்து செய்கின்றன. செய்தும் வருகின்றன.

இன்ப அன்புடன்,
**இரா. இளங்குமரன்**

Printed @ The Printing House, Try-23. Ph : 0431-2420121